# பல துறை நுண்ணறிவுகள் அணுகுமுறை வழிப் (MULTIPLE INTELLIGENCES APPROACH) பேச்சுத்திறனை மேம்படுத்துவோம்!

டாக்டர் சீதா லட்சுமி
துணைப்பேராசிரியர்/தலைவர்
தமிழ் மொழி மற்றும் பண்பாட்டுத் துறை
ஆசிய மொழிகள் மற்றும் பண்பாடுகள்
தேசியக் கல்விக் கழகம்
நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்
சிங்கப்பூர்

by **DR SEETHA LAKSHMI**
Assistant Professor,
Asian Languages & Cultures
National Institute of Education, Singapore


## ஆய்வுச் சுருக்கம்

சிறந்த அரசாங்கத்திற்கும் சீரிய முறையில் உழைக்கும் மக்களுக்கும் பெயர்பெற்ற நாடான சிங்கப்பூரில், ஆங்கிலம், சீனம், மலாய், தமிழ் ஆகிய மொழிகள் அதிகாரத்துவ மொழிகளாகத் திகழ்கின்றன. இங்கு, பாலர் பள்ளி முதல் தொடக்கக்கல்லூரிவரை மாணவர்கள் ஆங்கிலத்தை முதல் மொழி நிலையிலும், சீனம், மலாய், தமிழ் ஆகியவற்றைத் தாய்மொழி என்ற பெயரில் பெரும்பாலும் இரண்டாம் மொழி நிலையிலும் பயில்கிறார்கள். இந்திய மாணவர்களில் பெரும்பாலானோர் தாய்மொழிப் பாடமாகத் தமிழ் மொழியைப் பயில்கிறார்கள். இவர்களிடையே குறிப்பிடத்தக்க விகிதத்தினர் தமிழைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தாத குடும்பப்பின்னணியைக் கொண்டவர்கள். இந்நிலையில், தொடக்கப்பள்ளி மாணவர்கள் தமிழில் நன்கு பேசவும், அவ்வாறு பேசும்வகையில் அவர்களை ஊக்குவிக்கவும் தமிழாசிரியர்கள் அதிக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இக்கட்டுரை, பலதுறை நுண்ணறிவுகள் (Multiple Intelligences) என்ற அணுகுமுறையைப் பயன்படுத்தித் தொடக்கப்பள்ளி மாணவர்கள் தமிழில் பேசுவதை எவ்வாறு ஊக்குவிக்கலாம் என்று ஆராய்கிறது.

மனிதர்கள் அனைவரும் பலதுறை நுண்ணறிவுத் திறன்களைப் பெற்றிருப்பர். ஆனால், அந்நுண்ணறிவுகளின் அளவுகளிலும் அவர்கள் விரும்பிப் பயன்படுத்தும் நுண்ணறிவுத் திறன்களிலும் மாறுபட்டிருப்பர் என்பது ஹார்வர்ட் கார்ட்னரின் (Howrad Gardner, 2002) கருத்தாகும் (Bruse Williams, R., 1993). புத்தகம், தேர்வு என்ற வாழ்க்கைமுறையிலிருந்து, கணினி, தொலைக்காட்சி, கணினி வட்டு, எண்மானக் கருவிகள் எனப் பலவற்றைத் தினமும் புழங்கும் நம் மாணவர்கள் பலதுறை நுண்ணறிவுத் திறன்களையும் அதிகமாகப் பயன்படுத்தி வாழும் தலைமுறையினர். இவர்களிடம் பலதுறை நுண்ணறிவுகள் என்ற அணுகுமுறையைப் (MI Approach) பயன்படுத்தி வெற்றி பெற்ற சில உத்திகளையும் ஆய்வாளர் கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.


## முன்னுரை

ஒருவர் தம் வாழ்வில் தாம் பிறந்தது முதல் தொடர்ந்து தம்மை மேம்படுத்தும் தன்மை மிக்கவர். அவ்வாறு மேம்படுத்துவதன்வழித் தம் அறிவையும் அனுபவத்தையும் கொண்டு பல செயல்களில் ஈடுபட முடிகிறது. இன்று பலரும் கூறும் வாசகமான, "நீங்கள் எவ்வளவு புத்திசாலி என்பது முக்கியமல்ல. மாறாக, எப்படி நீங்கள் புத்திசாலியாக இருக்கிறீர்கள் என்பது மிக முக்கியம்" என்ற கூற்று இக்கட்டுரையுடன் மிகவும் பொருந்தும். இன்று கல்வியில் முன்னேறியவர் மட்டும் வெற்றியாளராகக் கருதப்பட முடியாது. கல்வியுடன் வேறு பல துறைகளிலும் சிறந்து விளங்குபவரே வெற்றியாளராகக் கருதப்படும் நிலை பரவலாக உள்ளது. இத்தகையவரே இன்றைய பன்னாட்டு நிறுவனங்களின் கவனத்தை ஈர்க்கிறார். இன்று பல்வேறுபட்ட திறன்களையும், கூடுதல் திறமைகளையும் கொண்ட சிங்கப்பூரர்கள் தேவைப்படுகிறார்கள். இவர்கள் வருங்காலத்தில் நாட்டுக்கு இன்னும் அதிகப் பங்காற்ற முடியும். இத்தகைய கருத்தை அப்போதைய இடைக்காலக் கல்வி அமைச்சர் (Tharman Shanmugaratnam, 2003), கல்வி அமைச்சின் பணித்திட்டக் கருத்தரங்கில் நிகழ்த்திய உரையின் வாயிலாகவும் உணரலாம்.

இன்று கல்வித்துறையில் கற்றல், கற்பித்தலை மேம்படுத்தும்வகையில் நாளும் பல புதிய அணுகுமுறைகளும்

உத்திகளும் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. சிங்கப்பூரில் தமிழ் மொழி கற்றல், கற்பித்தலில் பல புதிய அணுகுமுறைகள் இடம்பெற்று வருகின்றன. எடுத்துக்காட்டுக்கு, ஒருங்கிணைந்த பாடத்தொடர் அணுகுமுறை, கருத்துப்பரிமாற்ற அணுகுமுறை, செய்முறைக் கட்டுரை கற்பிக்கும் அணுகுமுறை, மாற்றம் செய்யப்பட்ட செய்முறைக் கட்டுரை கற்பிக்கும் அணுகுமுறை, குழுப்புலனாய்வு அணுகுமுறை, இணைய வினாவிளக்கம் தொடர்பான அணுகுமுறை போன்றவற்றைக் குறிப்பிடலாம். அவ்வரிசையில், ஒன்றாக ஹோவர்ட் கார்ட்னர் அறிமுகப்படுத்திய பலதுறை நுண்ணறிவுகள் எனும் அணுகுமுறை இடம்பெறுகிறது. பலதுறை நுண்ணறிவுகள் எனும்போது, எண்வகை நுண்ணறிவுகள் முக்கிய இடம் பெறுகின்றன. அவை,

1. கண்வழி மற்றும் கற்பனைநோக்கு தொடர்பானது Visual/Spatial (ஒன்றைப் பார்த்ததும் தம் மனத்தில் அதைக் காணுதல், தாம் எண்ணுவதை மனக்கண்ணில் வடிவமைத்துப் பார்த்தல் மற்றும் இவை தொடர்பான திறன்கள்). எடுத்துக்காட்டு: படம் வரைதல், கோலம் போடுதல் ஆகியவற்றில் சிறப்புத்தேர்ச்சி மற்றும் விருப்பம்.
2. காரணகாரியம் மற்றும் கணிதம் தொடர்பானது Logical/Mathematical(எதையும் ஏன், எதற்கு என்று வினாக்கள் கேட்டு விளக்கம் பெறல், கணிதம் மற்றும் கணிப்பில் சிறந்து விளங்குதல் மற்றும் இவை தொடர்பான திறன்கள்). எடுத்துக்காட்டு: ஒன்றிற்குக் காரணகாரியம் காணும் நோக்கில் பலவகைகளிலும் சிந்தித்தல்.
3. வாய்மொழி மற்றும் மொழியியல் தொடர்பானது Verbal/Linguistic (சொற்கள், சொற்கோவை, பேசுதல், கேட்டல், இலக்கியம் படைத்தல், பல மொழிகள் அறிதல், படைப்பிலக்கியம் படைத்தல் மற்றும் இவை தொடர்பான திறன்கள்). எடுத்துக்காட்டு: சிறந்தமுறையில் தொடர்பு கொள்ளுதல், சிறப்பான சொல்வளத்தைப் பயன்படுத்துதல்.
4. இசை மற்றும் நுண்கலை தொடர்பானது Musical/Rhythmic (பாடலுக்கு இசையமைத்தல், நாட்டுப்புற/ நவீன இசைப்பாடல்களைப் பாடுதல் மற்றும் இவை தொடர்பான திறன்கள்). எடுத்துக்காட்டு: புதிய இசை நுணுக்கங்களையும் இசைக்கலவைகளையும் அறிமுகப்படுத்துதல்.
5. உடல் மற்றும் அங்க அசைவுகள் தொடர்பானது Bodily/Kinesthetic (உடற்பயிற்சி, நடித்தல், உடலின் அசைவுகள் தொடர்பான ஆய்வுகள், நாடகம் நடித்தல் மற்றும் இவை தொடர்பான திறன்கள்). எடுத்துக்காட்டு: உடற்பயிற்சி வாயிலாகப் புதிய உத்திகளை அறிமுகப்படுத்துதல், நடனம் ஆடுதல் ஆகியவற்றில் சிறந்து விளங்குதல்.
6. மக்கள் தொடர்புத்திறன் குறித்தது Interpersonal (பிறருடன் மிக எளிதில் பேசி அவர்களுடன் கருத்துப்பரிமாறுதல், பலருடன் இணைந்து பணியாற்றுதல் மற்றும் இவை தொடர்பான திறன்கள்). எடுத்துக்காட்டு: மனிதநேய உறவில் சிறந்து விளங்குதல்.
7. தனக்குள்ளே தொடர்பு கொள்ளும் ஆற்றல் தொடர்பானது Intrapersonal (தனக்குத்தானே பலவகைகளில் தொடர்புகொள்ளுதல், இலக்கியம் படைத்தல், தியானம் செய்தல் மற்றும் இவை தொடர்பான திறன்கள்). எடுத்துக்காட்டு: சுய வளர்ச்சியில்/ சுய உணர்வில் சிறந்து விளங்குதல்.
8. இயற்கையின்மீது ஈடுபாடு கொள்ளும் ஆற்றல் தொடர்பானது Naturalist (இயற்கை, உலக அமைப்பு ஆகியவை தொடர்பான சிந்தனைத்திறன்கள்). எடுத்துக்காட்டு: தாவரங்கள், விலங்குகள், வானிலை ஆகியன தொடர்பான சிந்தனைகளிலும் துறைகளிலும் சிறந்துவிளங்குதல்.

கல்வியாளரான தாமஸ் ஆர்ம்ஸ்ட்ராங் (Thomas Armstrong, 1988), கற்பித்தலில் விறுவிறுப்பை ஊட்டும் பலதுறை நுண்ணறிவுகள் அணுகுமுறையை மாணவர்களின் சிறப்புத்திறமைகளைக் கண்டறிய உதவும் வழிகாட்டியாகவும் கொள்ளலாம் என்கிறார். அவர் கூறுவதுபோல் ஆராய்ந்துபார்க்கும்போது, கண்வழி மற்றும் கற்பனைநோக்குத் தொடர்பான மாணவன், தொலைநோக்கில் ஒரு நாடு அல்லது குறிப்பிட்ட ஓர் அம்சம் எவ்வாறு திகழும் என்பதை மனக்கண்ணில் காண்பதில் சிறந்து விளங்குவான். இத்தகையவன், அரசு பல துறைகளில் செயல்படுத்தும் scenario planning என்ற முன்னோக்கிக் கற்பனை செய்து திட்டமிடும் நடவடிக்கையில் பெரும்பங்காற்றுவான்.

காரணகாரியம் மற்றும் கணிதம் தொடர்பான மாணவன், அறிவியல் விஞ்ஞானி போன்று பல ஆய்வுகளை நடத்திப்பார்ப்பதிலும் தன் கருதுகோளைச் சரிபார்ப்பதிலும் புதிய முறைகளைக் கண்டறிவதிலும் புகழ் பெற்றிருப்பதுடன் கணிதத்திலும் சிறந்து விளங்குபவனாக அமைவான்.

வாய்மொழி மற்றும் மொழியியல்ரீதியாகச் சிறந்து விளங்கும் மாணவன், சொற்களைப் பயன்படுத்துவதில் சிறந்து விளங்குவான். அவன் கதை கூறுவதில் சிறந்தவனாகவும், எழுத்தாளனாகவும், சொல்விளையாட்டில் ஆர்வம் கொண்டவனாகவும் விளங்குவான்.

இசை மற்றும் நுண்கலையுடன் தொடர்புடைய மாணவன், பாடலைப் பாடுதல், இசைக்கருவியை இசைத்தல் ஆகியவற்றில் ஈடுபாடு காட்டுவான். இவன், இசை ஒலிக்கும் பின்னணியில் பாடம் நடைபெறுவதை விரும்புவான்.

உடல் மற்றும் மெய்ப்பாடுகள், சைகைமொழிகள் ஆகியன தொடர்பாக அதிகத் திறன் பெற்று விளங்கும் மாணவன், பல செய்திகளைத் தனது உடல் மற்றும் மெய்ப்பாடுகள், சைகைமொழிகள் ஆகியவற்றின் வாயிலாகவும் சில பொருட்களைத் தொட்டு விளக்குவதன் வாயிலாகவும் பலருக்கும் புரியவைப்பான்.

மக்கள் தொடர்புத்திறனும் பலருடன் கலந்துறவாடும் பண்பும் கொண்ட மாணவன், சிறந்த தலைமைத்துவப் பண்புகளை உடையவனாக இருப்பான். அவன் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவனாகவும், குழு நடவடிக்கையில் முக்கியமானவனாகவும் கூடிக்கற்பதில் ஈடுபாடு உடையவனாகவும் விளங்குவான். இத்தகையவன் ஆசிரியராகவும் திகழ்வான்.

தனக்குள்ளேயே தொடர்பு கொள்ளும் ஆற்றல் வாய்க்கப்பெற்ற மாணவன், உள்ளுணர்வு நோக்கியவனாகவும் சுயமாகத் தன்னை ஊக்குவிக்கும் பண்புடையவனாகவும் திகழ்வான். இவன் வகுப்பின்முன் தன் படைப்புகளைச் சிறப்பாகப் படைப்பதில் ஆர்வம் காட்டுவான்.

வழக்கமான பாரம்பரியக் கற்பித்தல் முறைகள், மொழி, காரணகாரியம் மற்றும் கணிதம் ஆகியன தொடர்பான மாணவர்களுக்கு அதிக ஈடுபாட்டைக் கொடுத்தாலும் மற்ற நுண்ணறிவுகளில் அதிக ஈடுபாடு காட்டும் மாணவர்களுக்குப் பாடத்தில் விருப்பத்தை உண்டாக்கா. இந்நிலையில், வகுப்பறையில் அமைதியாக உட்கார்ந்திருப்பது என்பது உடல்ரீதியாக அதிகமாகச் செயல்படும் மாணவர்களுக்கும் கண்வழி மற்றும் கற்பனை நோக்குடன் கற்க விரும்பும் மாணவர்களுக்கும் விருப்பமற்ற ஒன்றாக அமைந்துவிடும். மேலும் இத்தகைய மாணவர்கள் தங்களது திறன்களை வெளிப்படுத்த முயலும்போது, சிலசமயம் மிகவும் துறுதுறுப்பானவர்கள் (hyperactive) எனப்படலாம். கற்பனைநோக்குக் கொண்ட மாணவர்முன் எழுத்துகளையும் எண்களையும் சுண்ணப்பலகையில் எழுதிப்போடும்போது அவற்றில் அழகும் பலநிறங்களும் இல்லாத நிலையில் பாடத்தில் அவருக்கு விருப்பம் குறைய வாய்ப்புண்டு. இதனால் அவர் சிலசமயம் வாசித்தல் மற்றும் எழுதுதலில் பின்தங்கியவர் (dyslexic) என்றும் ஆசிரியர்களிடம் குறைகூறல்களைச் சந்திக்கக்கூடும் (தாமஸ் ஆர்ம்ஸ்ட்ராங். Thomas Armstrong, 1988). இத்தகைய மாணவர்கள் வழக்கமான வகுப்புகளில் விரும்பிப் பாடம் கற்கும் போக்குகள் குறைவாகவே இருக்கும். இவர்களுக்காக ஏற்பாடு செய்யப்படும் கூடுதல் வகுப்புகளும் உரிய பலன்களை வழங்குவது அரிதாகவே அமையும்.

மேற்கூறப்பட்ட நிலையினைப் போக்கவும், அனைத்து மாணவர்களும் ஆர்வத்துடன் வகுப்பில் பங்கேற்கவும் உதவும்வகையில் ஆசிரியர், கார்ட்னரின் பலதுறை நுண்ணறிவுகள் அணுகுமுறையுடன் தொடர்புடைய கற்பித்தலைப் பின்பற்றலாம். எடுத்துக்காட்டுக்குச் சில:

- இலக்கியப் பாடலைக் கற்பிக்கும்போதும் நயம் பாராட்டும்போதும் வகுப்பில் உள்ள மாணவர்களிடம் அது இடம்பெறும் சூழலை மனத்துக்குள் கற்பனை செய்யுமாறும், பாடலை ராகத்துடன் பாடுமாறும், அதற்கு ஏற்பக் கைதட்டுமாறும் கூறலாம். இது கற்பனைத் திறம், பாடல் பாடுதல், உடல் திறன் மிக்க மாணவர்களைப் பாடத்தில் மகிழச்சியுடன் ஈடுபடவைக்கும்.
- நீலக்கடலையோ மலரையோ பற்றிப் பாடம் நடத்தும்போது வகுப்பில் உள்ள கலைத்திறன் மிக்க மாணவர்களை அழைத்துப் படம் வரையச் சொல்லி அவர்களை ஊக்குவிக்கலாம். தொடர்ந்து பாட முடிவில் கவிதை புனையும் ஆற்றல் மிக்க மாணவரை அழைத்துக் கவிதை எழுத வைக்கலாம். முடிந்தால், பாடத்தெரிந்தவரை அழைத்துப் பாட வைக்கலாம்.

இங்கு மாணவர்கள் இவற்றில் ஈடுபடுமுன், ஆசிரியரே தம்மால் இயன்றவரை படம் வரைந்தும் பொருத்தமான பாடலை எழுதியும் காட்டலாம்.

மாணவர்களுக்குப் பெரும் விருப்பத்தைத் தரக்கூடிய நடவடிக்கைகளைப் பலதுறை நுண்ணறிவுகளின் உதவியுடன் நடத்தலாம். ஆனால், பெரும்பாலும் ஆசிரியர்கள் இந்த அணுகுமுறையைப் பாடத்தில் சுவையூட்டும் அம்சங்களாக ஆங்காங்கு பயன்படுத்துகின்றனர். பலர் பாட அறிமுகமாகவும் பாட முடிவாகவும் இதைப் பயன்படுத்துகின்றனர். இவை வரவேற்புக்குரியவை என்றாலும் மாணவர்களின் நினைவுகூரும் திறன்களை மட்டுமின்றி, உயர்நிலைச் சிந்தனைத்திறன்களையும் மேம்படுத்தும்வகையில் பாடம்முழுவதும் பயன்படுத்துவது சிறப்பானது.

மொழிப்பாடத்தில்பலதுறை நுண்ணறிவுகள் அணுகுமுறையைப் பயன்படுத்தும்போது மாணவர்கள் அத்துறை சார்ந்த அம்சங்களில் மொழியைப் பயன்படுத்த அறிந்துகொள்கின்றனர். இதன்வாயிலாக அவர்கள் தம் வாழ்வு முழுவதும் மொழியைப் பயன்படுத்துவதில் எளிமையை எதிர்நோக்குகின்றனர்.

ஒருவர் தம் மூளை-மனம்-உடல் ஆகிய மூன்றும் இணைந்த அமைப்புமுறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் பலதுறை நுண்ணறிவுகளைப் பயன்படுத்துவதன்வழி முழுமனிதராக உயர வழியிருப்பதை, ஹோவர்ட் கார்ட்னர், ஆய்வுகள் வழியே எடுத்துரைத்துள்ளார். பலதுறை நுண்ணறிவுகள் அணுகுமுறையின் தாக்கம் மொழி உள்ளிட்ட எல்லாப் பாடங்களிலும் வெற்றியை வழங்குவதை ஆய்வுகள் பல (David Lazear, 2003, Thomas Armstrong, 1988, Howard Gardner, 1990,1993, Bruce & Linda Campbell, 1992.) எடுத்துரைக்கின்றன. அவை கூறும் பயன்களில் சில வருமாறு:

- பலதுறை நுண்ணறிவுகள் அணுகுமுறை, மாணவர்கள் குறிப்பாக இளம் சிறுவர்கள் பாரம்பரியக் கற்பித்தல் முறையில் கிடைக்க இயலாத புதிய நன்மைகள் பலவற்றைப் பெற உதவியாக அமைந்துள்ளது.
- இந்த அணுகுமுறை, பலதுறைகளும் ஒருங்கிணைந்த பாடத்தை மாணவர்கள் பயில உதவி செய்கிறது.
- இம்முறையில், மாணவர்கள் தம்மைத் தாமே மேம்படுத்திக் கொண்டதுடன் பல புதிய திறன்களைப் பயன்படுத்த அறிந்திருந்தனர்.
- இம்முறை வாயிலாக, மாணவர்களிடையே சுயமாகச் செயல்படும் தன்மை, பொறுப்புணர்வு, சுயத்தை வளர்த்துக்கொள்ளும் பாங்கு ஆகியன அதிகரித்துள்ளன.
- இந்த அணுகுமுறையைக் கொண்ட பாடத்தின் பயனாகக் கல்வி ரீதியாக மாணவர்கள் உயர்ந்திருந்தனர். கூடிக்கற்கும் பாங்கு மாணவர்களிடையே ஆழமாகப் பதிந்திருந்தது.

## சிங்கப்பூரில் தமிழ் வகுப்பில் ‘பேசுதல்’

சிங்கப்பூரில் பள்ளிகளில் இடம்பெற்றுள்ள தாய்மொழிப் பாடங்களான சீனம், மலாய், தமிழ் ஆகிய மூன்றில் தமிழும்

தனக்கென ஓரிடத்தைப் பெற்றுள்ளது. தமிழைக் கற்கும் மாணவர்கள் தமிழில் கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நான்கு திறன்களுடன் சிந்தனைத் திறனையும் இணைத்துப் பாடங்களைக் கற்கின்றனர். இத்தகைய மாணவர்களில் குறிப்பாகத் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குத் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளாக இரண்டைக் குறிப்பிடுகிறார், இராஜலட்சுமி ராஜையா(2003). இவரது பார்வையில் அந்த இரண்டு பிரச்சினைகளாகத் தமிழ் மாணவர்கள் தமிழில் பேசத் தயங்குவதும் அவர்கள் பாடநூல்களைத் தவிர்த்துப் பிற நூல்களைப் படிக்க விரும்பாததும் எடுத்துரைக்கப்படுகின்றன. இங்கு, மாணவர்கள் சரளமாகப் பேசத் தயங்குவது முதலிடம் பெறுவதிலிருந்து அப்பிரச்சினையின் ஆழத்தை நாம் நன்கு உணர முடிகிறது. இத்தகைய மாணவர்களுக்குப் பேசுதலைக் கற்பிக்கும் வகையிலும் அவர்களது பேச்சுத்திறனை மேம்படுத்தும்வகையிலும் பல அணுகுமுறைகளும் உத்திகளும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அவ்வரிசையில், பலதுறை நுண்ணறிவுகள் அணுகுமுறையைப் பயன்படுத்துவது தொடர்பாக இக்கட்டுரை ஆராய்கிறது. இங்கு ஆய்வாளர் சில கற்பித்தல் உத்திகளை எடுத்துக்காட்டியுள்ளார். இவற்றில் பல, தொடக்கப்பள்ளி மாணவர்களுக்குப் பெரிதும் உதவியாக அமையும் என்பது அவர்தம் நம்பிக்கை.

## நடவடிக்கை 1
## நமக்குள் கேள்விகேட்டுப் பேசுவோம்

வினவுதல் என்பது இன்றைய கல்வியாளர்களால் அதிகமாக விரும்பப்படும் ஒரு வகுப்பறை நடவடிக்கை. அக்காலத்தில் ஒருவரைக் கேள்வி கேட்பது என்பது மதிப்புக் குறைவாகக் கருதப்பட்ட காலம் போய் இன்று கேள்வி கேட்பதால் ஒருவருக்கு மதிப்பு உயரும் என்று கருதும் நாள் வந்துள்ளது. நம் மாணவர்கள் குறிப்பாக ஆசிய மாணவர்கள் அதிலும் தமிழ் மாணவர்கள் தமிழ் வகுப்பில் அதிகமாகக் கேள்வி கேட்க முன்வருவதில்லை. இதற்கு, அனைத்தும் தெரிந்த ஆசானை வினவுவது சரியன்று என்று அவர்கள் கொண்டுள்ள எண்ணம் காரணமாக இருக்கலாம். எனினும் மாணவர்களைக் கேள்வி கேட்பதற்குப் பயிற்றுவிப்பது நமது கடமையாகும்.

கேள்வி கேட்கும் பயிற்சி மாணவர்களது தன்னம்பிக்கையையும் தன்முனைப்பையும் அதிகப்படுத்தும் தன்மையது. அவ்வகையில், பல கேள்விகளைக் கேட்டுப் பேசும் பயிற்சி பயனுடையதாக அமையும். இதற்குக் களமாக நம்மிடையே உள்ள ஒற்றுமை மற்றும் வேற்றுமை அம்சங்களைப் பாடக்கருப்பொருளாகக் கொள்ளலாம் என்பது ஆய்வாளர் கருத்து.

பல்லினச் சிங்கப்பூரில் நாம் அனைவரும் பலவகைகளில் ஒன்றுபட்டும் பலவகைகளில் வேறுபட்டும் இருக்கிறோம். இது நம் நாட்டுக்குப் பெரும் பலமாக அமைந்துள்ளது. அந்த அடிப்படையில் பின்வரும் கேள்விகளைக் கேட்கும் வகையில் பாடத்தை வடிவமைக்கலாம். இப்பாடத்தை இரண்டு நாள்களுக்கு நடத்தலாம்.

## பாடத்தலைப்பு: நான் மற்ற மாணவர்களுடன் எப்படி ஒன்றுபட்டிருக்கிறேன்? நான் மற்ற மாணவர்களிடமிருந்து எப்படி மாறுபட்டிருக்கிறேன்?

நாள்:1

பாட அறிமுகம்: ஆசிரியர் தாம் அண்மையில் வாசித்த ஒரு புத்தகத்தைப் பற்றிப் பேசுதல். அதில் உள்ள அம்சங்கள் குறித்து மேற்போக்காகக் குறிப்பிடுதல். அவர் கூறும் விதத்தின் அடிப்படையில் மாணவர்கள் அப்புத்தகம் பற்றித் தகவல்கள் கேட்டல்.

ஆசிரியர் ஒரு குறிப்பிட்ட இனம் அல்லது நாட்டைச் சேர்ந்த மக்களைப் பற்றிய பகுதியைத் தமிழில் வாசித்தல். ஆங்கிலப் பனுவலாக இருந்தால் அதைத் தமிழில் மொழிபெயர்த்து வாசித்தல். பிறகு, ஆசிரியர் தாம் வாசித்த பகுதியைப் பற்றி வகுப்பில் கலந்துரையாடுதல். பிறகு, அதில் குறிப்பிட்டிருப்பதுபோல நாம் இருக்கிறோமா என்று கேட்டல். மாணவர்கள் கருத்துகளைத் தெரிவித்த பிறகு, நாம் அப்புத்தகத்தில் உள்ளோருடன் சிலவகைகளில் ஒன்றுபட்டிருப்பதையும் சில வகைகளில் மாறுபட்டிருப்பதையும் குறிப்பிடுதல்.

ஒற்றுமை மற்றும் வேற்றுமைக்கூறுகளை எவ்வாறு நாம் ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று குறிப்பிடுதல். பிறகு, மாணவர்களை மூவராகக் கொண்ட குழுக்களாகப் பிரித்தல். மாணவர்களிடம், குழுவில் உள்ள ஒவ்வொருவருடனும் தாம் எப்படி ஒன்றுபட்டிருக்கிறோம் என்றும் எப்படி வேறுபட்டிருக்கிறோம் என்றும் உரையாடுமாறு ஆசிரியர் கூறுதல். இங்கு உரையாடலுக்கு உதவியாகச் சில வினாக்களைத் துணையாகக் கொள்ளலாம்.

வினாக்கள்:

நான் எங்கே பிறந்தேன்?

என் அப்பாவும் அம்மாவும் வேலை செய்கிறார்களா?

எனக்கு எத்தனை சகோதரர்கள், சகோதரிகள் உள்ளனர்?

உனக்குப் பிடித்த விளையாட்டு எது?

உன் வீட்டில் உனக்குப் பிடித்த இடம் அல்லது அறை எது?

உனக்குப் பிடித்த புத்தகம் எது?

நீ எப்போது புத்தகம் படிப்பாய்?

உனக்குப் பிடித்த வகுப்பு எது?

தமிழ் வகுப்பில் உனக்குப் பிடித்த பாடம் எது?

நீ பிற்காலத்தில் என்ன வேலை செய்யப்போகிறாய்?

உனக்குப் பிடித்த குணம் எது?

உன்னிடம் எனக்குப் பிடிக்காத குணம் எது?

பிறகு, ஆசிரியர் மாணவர்களிடம் அவர்கள் பெற்ற விவரங்களை வகுப்பின்முன் பகிர்ந்துகொள்ளுமாறு கூறுதல். அவரும் தமக்கும் அங்கிருக்கும் மாணவர்களுக்கும் உள்ள சில ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் வெளிப்படுத்துவார். அது தொடர்பாகச் சில வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுவார்.

எடுத்துக்காட்டுகள்:

இங்கே 'கோல்ப்' விளையாடுபவர்கள் யார்?

கால்பந்து விளையாடுபவர்கள் யார்?

யாருக்குக் கோழிச்சோறு உண்ணப் பிடிக்கும்?

இப்போது மாணவர்கள் தம்மைப்பற்றிப் பலரும் அறியும் வகையில் கவிதை ஒன்றைப் படைத்துப் பாடுவார்கள்; ஆடுவார்கள்; நாடகம்போல் நடிப்பார்கள்; வாசிப்பார்கள். ஆசிரியர் கவிதை எழுத உதவியாகச் சில மாதிரி அம்சங்களைக் கொடுப்பார்.

பாடமுடிவில் கவிதை எழுதுதல்(ஆசிரியர்தரும் உதவிக்குறிப்புகள்)

வரி 1: உனது பெயரை எழுது
வரி 2: நீ வசிக்கும் இடம் பற்றி எழுது
வரி 3: உன்னைப்பற்றிய சிறப்புகள் மூன்றை எழுது
வரி 4: நீ யாருடைய பிள்ளை என எழுது
வரி 5: உன் குணம் பற்றி எழுது
வரி 6: உனக்கு மகிழ்ச்சி தரும் இரண்டு அம்சங்கள் யாவை?
வர 7: உனக்குத் தேவையான இரண்டு பொருள்கள் யாவை?
வரி 8: உனக்குப் பயமான இரண்டு அம்சங்கள்/பொருள்கள் யாவை?
வரி 9: நீ விரும்பும் இரண்டு பொருள்கள் யாவை?
வரி 10: நீஅணியவிரும்பும் இரண்டு பொருள்கள்/உடைகள்/நிறங்கள் யாவை?
வரி 11: உனது பெயரை மீண்டும் எழுதிப் பாராட்டு.
வரி 12: நீ வாழும் பகுதியின் பெயரைக் குறிப்பிடு.

எடுத்துக்காட்டுக்கு ஒரு மாதிரிக் கவிதை:
என் பெயர் கிருத்திகா
நான் யீசூனில் வசிக்கிறேன்
நான் அன்பு, அழகு, அறிவு கொண்டவள்
நான் ஜீவனின் அருமை மகள்
நான் மிகவும் பொறுமையானவள்
பனிக்கூழும் விளையாட்டும் எனக்கு மகிழ்ச்சி தரும்
எனக்கு ஆஸ்திரேலியாவுக்கும் நியூசிலாந்துக்கும் போகவேண்டும்
எனக்கு இருட்டும் திகில்படமும் பயம்தரும்
நான் பட்டுப்பாவாடை, வண்ணப்பென்சில்களை விரும்புவேன்
நான் அணியவிரும்பும் இரண்டு நிறங்கள் ரோஜா(pink), நீலம்.
எனது பெயர் கிருத்திகா. நான் நல்ல பெண்.
என் வீடு யீசூனில்!

மாணவர்களில் சிலர் கவிதைகளைப் படைத்ததும், பாடம் இனிதாக நிறைவுக்கு வரும். தொடர்ந்து இதன் தொடர்ச்சியாக அடுத்த நாளும் பாடத்தை நடத்தலாம்.

நாள் 2

ஆசிரியர் முதல் நாள் படித்த பாடம் பற்றிக் கேட்டல். மாணவர்கள் கருத்துகளைக் கூறுதல்.

தொடர்ந்து அன்றைய பாட அறிமுகமாகச் செய்தித்தாள் அல்லது புத்தகங்களில் வந்த பிரபலமானவர்கள் ஓரிருவரைப்பற்றிப் பேசுதல்.

தாம் வாசித்த பிரபலங்கள்பற்றி ஆசிரியர் மேலும் சில விளக்கங்களைக் கொடுத்தல். பிறகு, அவர்களைப் பற்றி மாணவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று கேட்டல். மாணவர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தல்.

ஆசிரியர் மாணவர்களை இணையாகப் பிரித்தல். பிறகு, அவர்களிடம் அவர்கள் ஒவ்வொருவரும் யாரைப்போல் ஆக விரும்புகிறார்கள் என்று மற்றோர் இணையிடம் பேசச் சொல்லுதல். குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு அவர்கள் தம் இணையின் விருப்பம் பற்றிப் பேசுதல்.

இந்த நடவடிக்கையின் வாயிலாக மாணவர்கள் பலருக்கும் விருப்பமான துறையினர் யார் என்று அறியலாம். வகுப்பில் பலருக்கும் விளையாட்டுத்துறை சார்ந்தவரைப் பிடிக்கும் என்றால் பாடமுடிவில் மாணவர்களிடம் அவரவருக்குப் பிடித்த விளையாட்டு வீரரைப் பற்றிப் பேசச் சொல்லலாம். வேறு சிலரிடம், அவர்கள் சேகரித்த செய்திகளைக் கொண்டு அவர்களது விருப்பத்துக்குரிய வீரரைப் பற்றி, அவர்தம் வாழ்க்கைவரலாற்றைப்பற்றி நாடகமாக நடித்துக் காட்டவோ, கதையாகக் கூறவோ, பாடலாகப் பாடவோ சொல்லலாம்.

## நடவடிக்கை 2
## நீடித்த வாசிப்பின் நிறைவாகப் பேசுவோம்

வாசிப்புத் திறன் ஒருவரது வாழ்வில் அறிவொளி ஏற்றும் திறன் எனில் மிகையில்லை. ஒருவர் எந்த அளவிற்கு வாசிக்கிறாரோ அந்த அளவிற்கு அவர்தம் அறிவு மேம்படும். இன்றைய வேகமான வாழ்க்கைச் சூழலில் இந்தத் திறன் வளரும்வகையில் மாணவர்களுக்கு ஊக்கமூட்டுவது நம் கடமை எனலாம்.
ஆங்கிலப் புத்தகங்களுடன் ஒப்பிடும்போது தமிழ்ப் புத்தகங்களை அதிகமாக வாங்குவது நம் இந்தியரிடையே பிரபலமாக இல்லாதிருப்பதும். ஆங்கிலப் புத்தகங்களைப்போல விறுவிறுப்பான அம்சங்களைக் கொண்டதாகத் தமிழ்ப் புத்தகங்கள் பலவும் இல்லாதிருப்பதும் நாம் அறிந்த தகவலே (இராஜலட்சுமி ராஜையா., 2003). இதை மாற்ற முயலும் வகையில், நாமே மாணவர்களுக்கு ஏற்ற புத்தகங்களை வடிவமைப்பதும் வாங்கிவைப்பதும் பயன்மிக்கனவாக அமையும்.

பாடம் நடத்துவதற்கு முந்திய நாளே மாணவர்களிடம் ஆசிரியர் ஒவ்வொருவரும் இரண்டு தமிழ் வாசிப்புப் புத்தகங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கூறிவிடுவார். மறுநாள் காலையில் அல்லது பிற்பகலில் மாணவர்கள் பள்ளிக்கு வந்ததும் ஆசிரியரிடம் தம் பெயர்கள் எழுதப்பட்ட புத்தகங்களைக் கொடுத்துவிடுவார்கள். பாடம் தொடங்குமுன் ஆசிரியர் தம் வகுப்பின் ஒரு மூலையில் உள்ள வாசிப்பு வட்டாரத்தில் (Reading Zone) புத்தகங்களை அழகாக அலங்கரித்து மாணவர்தம் பார்வைக்கு வைப்பார். இவ்வாறு ஆசிரியர் அலங்காரம் செய்வது ஒருமுறை என்றால் மாணவர்களே இந்த அலங்காரத்தைச் செய்வது மற்றொரு முறை. அப்போது அதற்கான அழகிய துணிகள் அல்லது விரிப்புகள், பொம்மைகள் ஆகியவற்றையும் கொண்டுவருமாறும் அவர்களுக்குப் பிடித்த வகையில் அலங்கரிக்குமாறும் கூறலாம்.

இப்போது, மாணவர்கள் அனைவரும் ஆசிரியரின் கட்டளையைத் தொடர்ந்து தமக்குப் பிடித்த ஏதேனும் ஒரு

புத்தகத்தை எடுத்து வாசிக்க வேண்டும். வாசிக்கும்போது பிரச்சினைகளையோ இடர்ப்பாடுகளையோ எதிர்நோக்கும் மாணவர்கள் ஆசிரியர் உதவியுடன் பகுதியின் பொருளைப் புரிந்துகொள்வர். பிறகு, அதில் இடம்பெற்ற கதையை நடிப்பு, பாட்டு அல்லது கவிதை வாயிலாக எடுத்துக்கூற வேண்டும். இங்கு, மாணவர்கள் தாம் கொண்டுவந்த புத்தகத்தை மீண்டும் வாசிக்கக்கூடாது. புதிய நூலைத்தான் வாசிக்கவேண்டும். இங்கு, ஆசிரியரும் சில புத்தகங்களைக் கொண்டுவருவது ஏற்புடையது.

வாசிப்புப்பகுதி தொடர்பாகக் கிளைக்கதைகள் மற்றும் பிறதகவல்கள் ஆகியவற்றை ஆசிரியரும் மாணவர்களும் பகிர்ந்து கொள்வார்கள். இங்கு பேச்சு மொழியைப் பின்பற்றுவது ஏற்புடையது. ஒரு சில மாணவர்கள் எழுத்துத்தமிழில் பேசும்போது அவர்களைப் பேசவிட்டுவிட்டுப் பிறகு பேச்சுத்தமிழிலும் பேசலாம் என்று ஊக்குவிக்கலாம்.
பாடமுடிவில் பகுதியில் இடம்பெற்ற கதை, பிடித்த பாத்திரம், பிடித்த வாக்கியம், பிடித்த படம் என ஏதேனும் சில தொடர்பான கேள்விகளைக் கேட்டு ஆசிரியர் பேசவைப்பார்.

## நடவடிக்கை 3
## இலக்கணத்துடன் பேசவைத்தல்

சில படங்களைக் கொடுத்து அவற்றின் கீழே பேசும் வாக்கியங்களையும் கொடுக்கவேண்டும். பிறகு மாணவர்களிடம் படங்களில் உள்ளவர்கள் ஏன் அவ்வாறு பேசுகிறார்கள் என்று கேட்கவேண்டும். பிறகு, பேசுபவர்கள் ஏன் குறிப்பிட்ட அந்தச் சொல்லை அல்லது சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்கலாம். இவை மாணவர்களின் பேச்சுத்திறனையும் இலக்கணப் பழக்கத்தையும் அதிகப்படுத்தும். இப்பயிற்சி வாயிலாக மாணவர்கள் தம்மையறியாமல் இலக்கணச் சுத்தத்துடன் பேசும் திறனைப் பெறுவார்கள்.

## நடவடிக்கை 4
## மாணவர் வாழ்க்கையுடன் தொடர்புடைய அம்சங்களைப் பயன்படுத்திப் பேசுவோம்

இந்த நடவடிக்கையில் பின்வரும் படிநிலைகள் இடம்பெறும்.

1. மாணவர்களிடம் அவர்களுக்குப் பிடித்த உணவுகள் பற்றிப் பேசுதல்
2. விரைவு உணவு பற்றிக் குறிப்பிடும்போது, அதிலிருந்து பாடத்தை வழிநடத்திச் செல்லுதல்.
3. சில விரைவு உணவுக் கடைகளின் பெயர்களைக் கேட்டல்.
4. அங்கே இடம்பெறும் உணவுகள் பற்றிக் கேட்டல்.
5. பிறகு, மாணவர்களிடம் அவரவருக்கு விருப்பமான விரைவு உணவு பற்றிக் குறிப்பிடுமாறு கூறுதல்.
6. பலவகை உணவுகள் இருக்கும்போது குறிப்பாக விரைவு உணவுகளை மட்டும் விரும்பக் காரணம் என்ன என்று ஆசிரியர் கேட்டல். விரைவு உணவுகளை விரும்பாதவரும் உள்ளார்களா? அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறார்களா? என்று மாணவர்களிடம் கேட்டல். அது தொடர்பாக உரையாடுதல்.
7. சரி, உண்மையிலேயே விரைவு உணவு நல்லதா என்று கேட்டல்; கலந்துரையாடுதல். பிறகு, அதைப்பற்றி வீட்டில் உள்ளோரிடம் கருத்துகளைக் கேட்டுவருமாறு கூறிப் பாடத்தை முடிவுக்குக் கொண்டு வரல்.
8. மறுநாள் பாடம் தொடர்தல்.
9. அப்போது மாணவர்கள் கேட்டுக் கொண்டுவந்த செய்திகளின் அடிப்படையில் பேசுதல் நடவடிக்கை தொடர்தல்.

இந்தப் பாடத்தைப் பேசுதலுடன் மட்டுமின்றி நான்கு மொழித்திறன்களும் இணைந்துவரும்வகையிலும் நடத்தலாம். இது மாணவர்களுக்கு அவர்களது தினசரி வாழ்வுடன் தொடர்புடைய விருப்பமான ஒரு பாடமாக அமையும்.

## நடவடிக்கை 5
## உடல்முழுதும் இணைந்து பயிலுதல் (Total Physical Response)

ஆஷர் என்பவரால் 1979-இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த முறை மாணவர்கள் தம் அறிவால் மட்டும் கற்காது தம் உடலையும் ஒரே நேரத்தில் பயன்படுத்திக் கற்கும்போது கிடைக்கும் பலன் அதிகம் என்பதை எடுத்துரைக்கிறது. இந்த முறையில் தொடக்கத்தில் மாணவர்கள் எளிய கட்டளைகளைக் கேட்டுச் செயல்படுவர். பிறகு மெல்ல மெல்லக் கடினமான கட்டளைகளைக் கேட்டுச் செயல்படுவர்.

எடுத்துக்காட்டுக்கு, "நீங்கள் கையில் கருப்பு வளையல் அணிந்திருந்தால் உங்கள் மூக்கைத் தொடுங்கள்!" என்று அமையும். இதில் சிறிது பயிற்சி பெற்றபின், மாணவர்கள் ஆசிரியருக்கும் தம் சக மாணவர்களுக்கும் கட்டளைகளைக் கொடுப்பர். அவர்கள் கூறுவதைக் கேட்டுப் பிற மாணவர்கள் செயல்படுவார்கள். இந்த முறை மாணவர்களின் வாய்மொழித்திறனையும் கேட்டல் திறனையும் மேம்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கும்.

இங்கு கட்டளைகளைப் பயன்படுத்துவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. 1. இதில் மாணவர்கள் மிக விழிப்புடன் செயல்படுகிறார்கள். 2. கட்டளைகளில் எளிய வினைச்சொற்கள் இடம்பெறும் தன்மை. இதனால் மாணவர்கள் வாக்கியங்களில் இடம்பெறும் கால மாற்றம், கடினமான வினைச்சொற்கள் ஆகியவற்றினால் குழம்பிப் போகாது எளிதில் செயல்படமுடிகிறது.

இதில் ஸீகல் என்பவர் தமது கற்பித்தல் முறையைச் சற்று மேம்பட்டவகையில் அறிமுகப்படுத்தியுள்ளார். அம்முறையில், கேட்டல், பேசுதலைத் தொடர்ந்து வாசித்தலும் எழுதுதலும் எளிதாகக் கைவரப்பெறுவதாகக் கூறியிருக்கிறார்.

இதே போன்று ரோமஷின், ஸீலி ஆகிய இரு ஆய்வாளர்களும்

சில உத்திகளை அறிமுகப்படுத்தியுள்ளனர்.

அவர்களுடைய உத்திமுறைகளில் இடம்பெற்றுள்ள சில கட்டளைகள் வருமாறு:

- மெழுகுவர்த்தியை அதற்குரிய தட்டில் வைக்கவும்.
- தீப்பெட்டியிலிருந்து தீக்குச்சிகளை எடுங்கள்.
- ஒரு தீக்குச்சியைப் பற்றவைக்கவும்.
- மெழுகுவர்த்தியை ஏற்றவும்.
- தீக்குச்சியை அணைக்கவும்.
- அதை வீசவும்.
- தீப்பெட்டியை ஓரமாக வைக்கவும்.
- இப்போது மெழுகுவர்த்தியைப் பார்க்கவும்.
- அதை ஊதி அணைக்கவும்.

இந்த உத்தி முறையின் வாயிலாக, வினைச்சொற்கள், காலங்கள், இலக்கணக்கூறுகள் மற்றும் பழமொழிகள், மரபுத்தொடர்கள் ஆகியவற்றை எளிமையாகக் கற்பிக்க இயலும். மேலும், இதில் மாணவர்கள் தம் மொழியை நன்கு புரிந்து சிறப்பாகப் பேசும்வகையில் நீக்குப்போக்கான அம்சங்கள் உள்ளன. மாணவர்கள் தாம் கேட்ட கட்டளைகளைச் செயல்படுத்தும்வகையில் விளையாட்டுகளைக்கூட விளையாடிப் பேச முடியும். எனினும் பெரும்பாலான ஆசிரியர்கள் கீழ்நிலை வகுப்பு மாணவர்களுக்கு எளிய முறைகளில் அமைந்த கட்டளைகளையே பயன்படுத்த விரும்புகின்றனர். தொடர்ந்து அவர்கள் மாணவர்களின் வயது மற்றும் வாழ்க்கை அனுபவத்துக்கேற்பக் கடினமான முறைகளைப் படிப்படியாகப் பயன்படுத்துகிறார்கள்.

## TPR முறையில் வேறு சில பயிற்சிகள்

ஆசிரியர் முதலில் மாணவர்களிடம் கட்டளைகளைக் கேட்குமாறு கூறுவார். பிறகு, கேட்ட கட்டளைகளின்படி மாணவர்கள் செயல்பட வேண்டும் என்றும் தெரிவிப்பார். அதன்படி அவர்கள் அவ்வாறே செயல்பட வேண்டும். பிறகு, முதலில் செயல்பட்ட மாணவர் மற்றொரு மாணவரிடம், தூய தமிழ் மொழியிலும் பேச்சுத் தமிழ் மொழியிலும் கட்டளையிட வேண்டும். கட்டளையின் இடையிடையே தொடர்புச் சொற்களையும் பயன்படுத்திப் பேசலாம். இதில் ஆசிரியர் தந்த பகுதியுடன் தன் சொந்தக் கருத்துகளையும் இணைத்துக் கட்டளையிடலாம்.

## முட்டைகளை உடைத்தல்

முட்டையுடன் கூடிய உணவைத் தயாரித்தல் தொடர்பான கட்டளைகள் வருமாறு:

- மாணவனே, நீ இப்போது ரொட்டிக்கு உதவியாக “டோஸ்ட்” என்ற ஓர் உணவைச் செய்யப் போகிறாய்.
- இரண்டு முட்டைகளை எடுத்து சரிபாதியாக உடைத்து உள்ளே உள்ள மஞ்சள் மற்றும் வெள்ளைக் கருக்களைக் கிண்ணத்தில் போடு.
- அவற்றை மேசைக் கரண்டியால் நன்கு அடித்துக் கொள்.
- பிறகு, அதில் சிறிது மிளகுத்தூளும் உப்பும் போடு.
- மீண்டும் முட்டைக்கலவையை மேசைக் கரண்டியால் கலக்கு.
- இப்போது அடுப்பைப் பற்றவைத்து எண்ணெய்ச் சட்டியை வை.
- எண்ணெய்ச்சட்டியில் எண்ணெயை ஊற்று.
- எண்ணெய் மெல்லச் சூடானதும் முட்டைக் கலவையை ஊற்று.
- பூப்போல் வரும்வரை தொடர்ந்து கிளறிக்கொண்டே இரு.
- பதமாக வந்ததும் ஒரு தட்டில் எடுத்து வைத்துப் பரிமாறு. இப்போது நீ அதைச் சாப்பிடு.

இந்த முறையில், முதலில் மாணவர்களில் பாதிப்பேர் தங்கள் வகுப்பில் உள்ள தத்தம் இணை மாணவர்களிடம் கட்டளைகளைச் சொல்வார்கள். பிறகு மேற்கூறிய கட்டளைகளைப் பின்பற்றிய மாணவர்கள் செய்த செயல்களை இவர்கள் ஒவ்வொருவராக வகுப்பின்முன் எடுத்துரைப்பார்கள். முடிவில், முதலில் கட்டளைகளைப் பின்பற்றிய மாணவர்கள் இவர்களுக்குக் கட்டளைகளைக் கூற இவர்கள் அவற்றின்படி செயல்படுவார்கள். இது மாணவர்களின் பேச்சுத்திறன், நடைமுறை வாழ்க்கைத்திறன், சொற்கோவை ஆகியவற்றை மேம்படுத்துவதுடன் வகுப்பறையில் கலகலப்பையும் ஊட்டும் தன்மையது. பாவனை நடிப்புத்திறன்களையும் கொண்ட இந்த நடவடிக்கை சிறிய வகுப்புகளுக்கு ஏற்றது.

இதேபோன்று மேலும் சில நடவடிக்கைகள் வருமாறு:

## பனிக்கூழும் நானும்

- குளிர்சாதனப்பெட்டியைத் திறந்து மிகவும் குளிரான பகுதியைத் திற.
- அங்கிருக்கும் பனிக்கூழ் டப்பாவை எடு.
- அதை மெல்ல லாவகமாகத் திற.
- கொஞ்சம் பனிக்கூழைக் கரண்டியால் எடுத்துக் கிண்ணத்தில் போடு.
- பக்கத்தில் உள்ள முந்திரி மற்றும் பாதாம்பருப்புத் தூளை அதில் தூவு.
- பனிக்கூழ் டப்பாவை வைத்துவிட்டுக் கூடத்திற்குப் போ.
- தொலைக்காட்சியில் வசந்தம் சென்ட்ரல் நிகழ்ச்சியைத் திற/போடு.
- அங்கிருக்கும் நாற்காலியில் அமர்ந்தபடி பனிக்கூழைச் சாப்பிடு.
- சுவையாக உள்ள பனிக்கூழை முடித்ததும் இன்னும் கொஞ்சம் எடுக்கச் சமையலறைக்குப் போ.
- பனிக்கூழ் டப்பாவை எடு.
- நீ சரியாக மூடாததால் பனிக்கூழ் டப்பா கீழே விழுந்துவிட்டது.
- எங்கும் பனிக்கூழ் பரவிவிட்டது.
- என்ன செய்ய? எங்கும் ஒரே பசைதான்! பனிக்கூழ்தான்!
- எப்படிச் சுத்தம் செய்யப்போகிறாய்? நன்றாக யோசி.

## குழந்தையைத் தாலாட்டுதல்

குழந்தை என்றால் அனைவருக்கும் விருப்பம். ஏழுசுவரங்களுடன் இசைக்கும் அக்குழந்தை ஓர் இனிய அதிசயம். அதைச் சிறிது

நேரம் பார்த்து ரசிப்பது பலருக்கும் பிடிக்கும். ஆனால், முழுநாளும் வைத்துப் பார்ப்பது மிகவும் கடினம். ஏனெனில் அதன் பலவித நடவடிக்கைகளும் நமக்குக் களைப்பையும் கோபத்தையும் சில சமயம் உடல்வலியையும் கொடுத்துவிடும்.

பள்ளிகளில் குறிப்பாக உயர்நிலைப் பள்ளிகளில் குழந்தையைப் பராமரிப்பது குறித்து மனை அறிவியல்(Home Economics) பாடத்தில் கற்றுக்கொடுக்கிறார்கள். எதிர்காலத் தலைவர்களுக்கும் தலைவியருக்கும் இல்ல வாழ்க்கைத்திறன்களைக் கற்றுத்தரும் இப்பாடத்துடன் தொடர்புடைய நடவடிக்கையை மாணவர்களிடம் பேசுதல் பாடத்திற்குப் பயன்படுத்தலாம்.

மாணவர்களிடம் குழந்தை போன்ற பொம்மையைக் கொடுத்து அதுதொடர்பாகக் கூறப்படும் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.

- பிறந்து ஆறு மாதமே ஆகும் குழந்தையை மெல்லத் தூக்கு.
- அதை மடியில் கிடத்தி உணவு ஊட்டத் தயாராகு.
- அட! என்ன அழகான குழந்தை! அது உன்னையே பார்க்கிறது. அதைக் கொஞ்சியபடியே அதனுடன் பேசு.
- மெல்ல அதை அணைத்து அதன் முடியைக் கோதி உச்சி முகர்ந்திடு.
- பக்கத்தில் உள்ள "பாட்டில்" உணவைத் திற. மூடியைத் தள்ளி வை.
- அதில் உள்ள பழக்கலவையைச் சிறிய கரண்டியால் எடுத்து மெதுவாக ஊட்டு.
- உம். . ம் . நன்றாகச் சாப்பிடுவதுபோல் தெரிகிறது. இன்னும் கொஞ்சம் கொடு பார்க்கலாம்.
- அதனுடன் தொடர்ந்து பேசியபடி ஊட்டு.
- சரி! இப்போது தேன் தண்ணீரைக் கொடு.
- என்ன ஆயிற்று? குழந்தை தண்ணீரை வெளியே உமிழ்கிறதே!
- புரைக்கேறிவிட்டது என்று நினைக்கிறேன். உச்சியில் ஊதி முதுகில் தட்டிவிடு பார்க்கலாம்.
- உன் உடையெல்லாம் நனைந்துவிட்டதே! எப்படி இருக்கிறது உனக்கு?
- ம். . .ஹூம். . . ம். .

## நடவடிக்கை 6

இயல்பான அணுகுமுறை (The Natural Approach)

கிராஷன் மற்றும் டெரல் என்பவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட இம்முறை (Yvonne S Freeman, David E Freeman, 1998) மொழிகைவரப்பெறலை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. மொழிகைவரப்பெறல் இயல்பான முறையில் அமைவது அவசியம். அத்தகைய நோக்கில் இம்முறையும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த முறையில், பேசுதல் வாயிலாக மாணவர்கள் பல செய்திகளை வெளிப்படுத்துதல் வேண்டும். மாணவர்கள் தாம் இயல்பாகச் செயல்படும் வகையில் அமைந்த சுதந்திரமான மனநிலையில் மட்டுமே எழுத்து மற்றும் வாய்மொழித்திறன்களைப் பெறுவது இயலும். எந்தவித அச்சமும் நடுக்கமும் இல்லாத நிலையில் அவர்கள் அதிகமாகப் பேச ஊக்குவிக்கப்படுவார்கள். அவ்வகையில் இங்கு பேசுதல் திறனுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மாணவர்கள் பேசும்போது அவர்கள் பேச்சுமொழியைப் பயன்படுத்துகிறார்களா எழுத்துமொழியைப் பயன்படுத்துகிறார்களா என்பதை வேறு அளவுகோல் கொண்டு மதிப்பிட வேண்டும். எனவே, இங்கு பேசும் திறனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது எனலாம்.

மேற்கூறப்பட்ட உத்திமுறை பல ஆசிரியர்களால் பின்பற்றப்படுகிறது. இதில் ஒரே ஒரு முக்கியப்பணி என்னவென்றால் ஆசிரியர்கள் தாம் கூறும் கருத்துகளையும் கட்டளைகளையும் தெளிவாகப் புரியும் வகையில் குறிப்பிடவேண்டும். இது ஆசிரியர்களுக்கு மிகவும் உதவியாக அமையும் என்று இதன் வடிவமைப்பாளர்கள் நம்புகின்றனர். இதில் நான்கு படிநிலைகளில் மாணவர்கள் தம்மை மேம்படுத்திக்கொள்கின்றனர். ஒவ்வொன்றிலும் ஒரு சூழல் கொடுக்கப்பட்டிருக்கும். அந்தச் சூழல்களைப் பார்ப்போம்.

படிநிலை 1

ஆயத்தநிலை

ஆசிரியர் பொதுவான சில செய்திகளைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பார். பிறகு அவர் கேட்கும் கேள்விகளுக்கு "ஆம்", "இல்லை" என்பவற்றில் ஒன்றையோ அல்லது பிறரது பெயர்களை மட்டுமோ மாணவர்கள் பதில்களாகக் கூற வேண்டும்.

எடுத்துக்காட்டுக்கு ஆசிரியர் தம் கையில் உள்ள சிவப்பு வளையலைக் காட்டி, "இது எனது வளையல்! இது சிவப்பு நிறம்" என்பார். பிறகு, "நான் கூறியது சரிதானே!" என்றதும் மாணவர்கள் "ஆம்" என்பார்கள்.

தங்கள்பதில்களைமாணவர்கள்வாய்மொழியுடன்மெய்ப்பாடுகள், அங்க அசைவுகள், சைகை மொழி ஆகியவற்றாலும்கூட வெளிப்படுத்துமாறு ஊக்குவிக்கப்படுவர். இம்முறையில் கேட்டல் கருத்தறிதல் பனுவல்கள் ஒலிபரப்பப்பட்டுப் பதில்கள், வாய்மொழி வாயிலாகப் பெறப்படும்.

படிநிலை 2

இந்தப் படிநிலையில் ஆசிரியர் ஒரு பொருளைக் கையில் வைத்திருப்பதுடன் அது தொடர்பான பல கிளைச்செய்திகளைக் குறிப்பிடுவார். மாணவர்களிடம், "உங்களில் யாராவது இதைப் பற்றி அறிந்திருக்கிறீர்களா?" என்றதும் மாணவர்கள், "ஆமாம்" என்று பதில் கூறுவர். பிறகு பாடம் தொடரும். ஆசிரியர் தொடர்ந்து கேள்விகளைக் கேட்பார். இங்கு ஐம்புலன்களில் ஏதேனும் ஒன்றின் பணிகள் தொடர்பாகக் கேள்விகள் கேட்பார்.

இப்பயிற்சியின் வாயிலாக ஆசிரியர் மாணவர்களின் சொற்கோவைத் திறன்களையும் சோதிக்கிறார். மேலும் தாம் அறிந்த சொற்களை மாணவர்கள் வெளிப்படுத்தவும் இங்கு ஊக்கம் தரப்படுகிறது.

படிநிலை 3

ஆசிரியர் ஒரு மாணவரை அழைத்து ஒரு பூவைக் கொடுத்து முகரச் சொல்வார். அப்போது மற்ற மாணவர்களிடம், "அவன்

என்ன செய்கிறான்?'' என்று கேட்பார். மாணவர்கள், ''அவன் பூவை முகர்கிறான்'' என்பார்கள். பிறகு ஆசிரியர், ''இந்தப் படத்தில் உள்ள மலரை நம் கண்களும் விரல்களும் பார்த்தால், தொட்டுப்பார்த்தால் என்ன பதிலைச் சொல்லும்?'' என்பார். மாணவர்கள், ''பச்சை என்றும் மென்மையாக இருக்கிறது என்றும் கூறும்'' என்று பதில் தெரிவிப்பர். பிறகு, ஆசிரியர், ''அது மென்மையாக இருக்கிறதா?'' என்பார். மாணவர்கள், ''ஆமாம்'' என்பர். மாணவர்களின் புரிந்துணர்வுக்கு உதவும் வகையில் சில மலர்களையும் கொண்டுவந்திருப்பார். இங்கு மாணவர்கள் பேசும்போது, ஆசிரியர் எந்த வகையிலும் அவர்களது இலக்கணப்பிழைகளைச் சுட்டிக்காட்டமாட்டார். மாணவர்களைப் பேச வைப்பதுதான் இங்கு அவரது பணியாக அமையும்.

இந்தப் படிநிலையில் மாணவர்கள் நீளமான வாக்கியங்கள் மற்றும் தொடர்களைப் பேச ஊக்குவிக்கப்படுவார்கள். தொடர்ந்து தங்கள் சொற்கோவைத் திறன்களையும் அவர்கள் மேம்படுத்திக்கொள்வார்கள். இங்கு, மொழியை இன்னும் மேம்பட்ட நிலைகளில் பயன்படுத்த அவர்கள் அறிந்து கொள்வார்கள்.

படிநிலை 4

இங்கு ஆசிரியர் பல படங்களைக் காட்டக் காட்ட அவற்றுடன் தம் ஐம்புலன்களையும் இணைத்துச் சிந்தித்துப் பேசுவார்கள். எடுத்துக்காட்டுக்கு, ஆசிரியர், ''நமது ஐம்புலன்களும் நமக்கு எப்படி உதவுகின்றன?'' என்றால் அவர்கள் அதற்கு ஏற்பப் பதில் கூறுவர். இங்கு மாணவர்களின் மேம்பட்ட மொழித்திறன்கள் குறிப்பிட்ட தலைப்புத் தொடர்பான செய்திகளைப் பகிர்ந்து கொள்ள உதவியாக அமையும். இப்படிநிலையில், கேட்டல், பேசுதல் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் தரப்படுவதாக இருந்தாலும் இம்முறையை நான்கு மொழித்திறன்களையும் ஒருங்கிணைத்துக் கற்பிக்கவும், அவற்றை மேம்படுத்தவும்கூடப் பயன்படுத்தலாம். இங்கு ஆய்வாளர் கேட்டலைத் தொடர்ந்து நிகழும் பேசுதலை மேம்படுத்தப் பயன்படுத்திக் கொண்டார். இந்த முறையில் மாணவர்கள் இலேசான மனநிலையில் அழுத்தம் ஏதுமின்றிச் செவிமடுத்துப் பின் பேசுதல் திறனை வெளிப்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள.

## நடவடிக்கை 7

பாடலைப் பயன்படுத்திப் பேசுதல்

மாணவர்களுக்கு அவர்களுக்குப் பிடித்த பனிக்கூழ் பாடலை ஒருவர் முணுமுணுக்க, அனைவரும் பனிக்கூழ் தொடர்பான நினைவுகளில் மூழ்கத்தொடங்குவர். இந்நிலையில் ஆசிரியர் அப்பாடலை முழுமையாக ஒலிபரப்புவார். மாணவர்கள் பாடலின் இசை மற்றும் பொருளில் ஈடுபாடு காட்டுவர். பிறகு, மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து, பாடல் குறித்த அவர்களின் கருத்துகளையும் வாழ்க்கை அனுபவங்களையும் ஆசிரியர் கேட்பார். பிறகு அவர்களுக்குப் பிடித்த வரியைக் கேட்பார்.

ஆசிரியர், தொடர்ந்து பாடலை மீண்டும் ஒருமுறை ஒலிபரப்புவார். இப்போது மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த வரி பற்றிப் பேசுவர். தொடர்ந்து, ஒவ்வொரு குழுவினரும் அவர்கள் வாழ்வில் அவர்களுக்குப் பிடித்த அம்சம் குறித்துச் சிறிய கவிதை ஒன்றை எழுதுமாறு பணிக்கப்படுவர். கவிதை எழுத இயலாதவர்கள் அல்லது சற்றே சிரமப்படுபவர்கள் கதை ஒன்றையோ நேரடி வர்ணனை போன்ற பனுவல் ஒன்றையோ உருவாக்கலாம். குறிப்பிட்ட நேரம் முடிந்ததும் ஒவ்வொரு குழுவும் தாம் உருவாக்கிய படைப்பை வேறொரு குழுவிடம் கொடுக்கவேண்டும். படைப்பைக் கையில் பெற்ற குழுவின் உறுப்பினர்கள், படைப்பை வாசித்து உறுப்பினருக்கு ஒன்று என்று ஒரு கேள்வியைப் படைப்பை உருவாக்கிய குழுவிடம் கேட்பார்கள்.

பாடலையோ கதையையோ வர்ணனையையோ எழுதிய குழுவினர் கேட்கப்படும் வினாக்களுக்குப் பதில் கூறுவர். இவ்வாறு எல்லாக்குழுக்களிலும் படைப்புகள் தொடர்பாகக் கேள்விபதில் நேரம் இடம்பெறும். தொடர்ந்து ஒவ்வொரு குழுவினரும் தாங்கள் உருவாக்கிய படைப்பைக் குழுநடனம், முழக்கவாசகங்கள், சத்தமாகப் பாடுதல் என ஏதேனும் ஒருமுறையைப் பின்பற்றிப் படைக்க வேண்டும். ஐம்புலன்களுக்கு விருந்தாகும் இப்படைப்பு அவர்களிடையே ஊக்கத்தை அதிகப்படுத்தும்.

## நடவடிக்கை 8
## விளம்பரம் புனைவோம்!

மாணவர்கள் மட்டுமின்றி இன்று அனைவரும் மக்கள் தொடர்புச் சாதனங்களிலும் மக்களிடையேயும் இடம்பெறும் விளம்பரங்களையும் அவை கூறும் வாசகங்களையும் கண்டும் கேட்டும் மயங்கிவிடுகிறோம். சில சமயங்களில் நம்மை நாம் இழந்தும் விடுகிறோம். இத்தகைய உத்தியை மாணவர்களிடையே பயன்படுத்தும்போது, அவர்கள்தம் திறமைகளை வெளிப்படுத்திப் பேசுவர் என்பதில் ஐயமில்லை.

எடுத்துக்காட்டுக்கு, ஓர் அவசர விளம்பரம் தயாரித்தல். அனைவரும் பயன்படுத்தும் வாசனைத்திரவியம் அல்லது பவுடர் தொடர்பான விளம்பரத்தை மாணவர்கள் குறைந்த நேரத்தில் உருவாக்கிப் படைக்க வேண்டும். குழுவாக அவர்கள் செயல்படும் இந்நடவடிக்கையில் பின்வரும் அம்சங்கள் இடம்பெற்றிருப்பது நன்று.

1. புதிய தயாரிப்பின் பெயர்: ______________________
2. புதிய தயாரிப்பின் நிறம்: ______________________
3. புதிய தயாரிப்பின் மணம்: ஒன்றில் புட்குறியிடுதல்: ரோஜா, மல்லிகை, அத்தர், சம்பங்கி.:
4. புதிய தயாரிப்பின் விலை: ______________________
5. புதிய தயாரிப்பின் வடிவம்: ஒன்றில் புட்குறியிடுதல்: கைக்கு அடக்கமான வடிவம், நீளமான வடிவம், பூச்சாடி போன்ற வடிவம்.
6. புதிய தயாரிப்பு வெளிவரும் அளவு: ஓர் அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ்: ______________________
7. புதிய தயாரிப்பு வெளிவரும் கொள்கலனில் இடம்பெற்றுள்ள வாசகம்: ______________________

______________________________________________

8. புதிய தயாரிப்பைப் பயன்படுத்திப் பார்த்தவரின் கருத்து:

______________________

தொடர்ந்து விளம்பரம் வாசிக்கப்படும். அதுபற்றி விவாதிக்கப்படும்.

## நடவடிக்கை 9
## பண்டிகைக் காலம் குறித்த பாடங்கள்

பண்டிகைகள், பண்பாட்டுவிழாக்கள் தொடர்பான பாடங்களைக் கொண்ட இம்முறையில், வகுப்பில் ஆசிரியர் தீபாவளி தொடர்பாகத் தேவையான பலவிதக் கருவிகளையும் அட்டைகளையும் வண்ணவிளக்குகளையும் சுவரில் பதித்து வகுப்பை அழகுபடுத்தியிருப்பார். பிறகு, பாட அறிமுகம் செய்வார்.

தொடர்ந்து தீபாவளி பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும். மாணவர்களும் ஆசிரியர்களும் உரிய விளக்கங்களைப் பெற்ற பிறகு, தீபாவளி நிகழ்ச்சி ஒன்று தொடர்பாகச் சிறிய நாடகம் ஒன்றை மாணவர்கள் குழுவாகக் கலந்துரையாடி, பின் இணைந்து படைப்பர். இது அவர்களிடையே பேசுதல் திறனை அதிகப்படுத்தும் என்பது திண்ணம்.

## கிறிஸ்துமஸ் பரிசுப்பொருட்களும் நானும்

உலகம் முழுவதும் கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு, மக்கள் பரிசுப்பொருட்களை வழங்குவது இயல்பு. இங்கு, அத்தகைய பரிசுப்பொருட்கள் தொடர்பான பேசுதல் நடவடிக்கை இடம்பெறவுள்ளது.
வகுப்பில் உள்ள மாணவர்கள் அனைவருக்கும் ஓர் அட்டை வழங்கப்படும். அந்த அட்டையில் ஒருவர் பெற்ற கிறிஸ்துமஸ் பரிசுப்பொருளும் அது பற்றிய அவர்தம் கருத்தும் இடம்பெற்றிருக்கும். இத்தகைய அட்டைகளைப் பெறும் ஒவ்வொருவரும் வகுப்பில் ஓர் இணையைத் தேடிக் கொள்ள வேண்டும். பிறகு, தம் இணையிடம் தம் அட்டையில் உள்ள கருத்தைத் தம் கருத்தாக வெளிப்படுத்த வேண்டும். கூடுதலாக, வரவிருக்கும் புத்தாண்டுக்குத் தாம் எதிர்பார்க்கும் பரிசையும் சைகை வாயிலாகத் தெரிவிக்க வேண்டும். சைகை மொழியைப் புரிந்துகொண்ட இணை உறுப்பினர், அதைப் பேச்சில் வெளிப்படுத்துவார். பிறகு இது தொடர்பாகக் கருத்துப் பரிமாற்றம் நிகழும். ஆசிரியர் தாமும் ஓர் அட்டையைப் பயன்படுத்தித் தம் இணையுடன் பேசுவதுடன், வகுப்பில் கலந்துரையாடல் நன்கு நடைபெறவும் உதவி புரிவார். எடுத்துக்காட்டுக்குச் சில அட்டைகள்:

| | |
|---|---|
| கிறிஸ்துமஸ் தாத்தா எனக்கு வாசமிக்க சேனல் எண் 5 வாசனைத் திரவியத்தைப் பரிசுப்பொருளாக அனுப்பி வைத்துள்ளார். வாசனைத் திரவியம் என்றாலே எனக்கு ‘அலர்ஜி! (ஒவ்வாமை). என்ன செய்ய? | எனக்கு இந்தக் கிறிஸ்துமஸுக்கு ஒரு கணினி விளையாட்டு ஒளிவட்டைப் பரிசாக வழங்கியுள்ளார். என் வீட்டில் கணினி இல்லை. என் அம்மாவோ இப்போது வாங்கித்தர முடியாது என்கிறார். என்ன செய்யலாம் என்று சொல் பார்க்கலாம். |
| கிறிஸ்துமஸ் பரிசாக எனக்கு நெற்றியில் ஒட்டும் பொட்டு அட்டைகள் ஐம்பது கிடைத்தன. எனக்குத் தோல் ‘அலர்ஜி’ (ஒவ்வாமை) இருப்பதால் அவற்றைப் பயன்படுத்த முடியாதே. என்ன செய்வது? ஒரு வழி சொல் பார்க்கலாம். | எனக்கு இந்த கிறிஸ்துமஸுக்கு என் பெரியம்மா, அழகான பட்டுப் பாவாடைத் துணியை வாங்கிக் கொடுத்திருக்கிறார். இந்தியாவில் தைத்தால் செலவு குறைவு என்று என் அம்மா கூறுகிறார். நானோ அதிகமாக நாகரிக உடைதான் அணிவேன். இந்த நிலையில் நான் என்ன செய்வது? எனக்கு ஒரு வழி கூறு பார்க்கலாம். |

## இன்னும் பல. . . .

பலதுறை நுண்ணறிவுகள் அணுகுமுறையைப் பயன்படுத்தியும் அதனுடன் தொடர்புடைய உத்திகளைப் பயன்படுத்தியும் மாணவர்களின் பேசுதல் திறன்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற சில வழிகள் பற்றி மேலே கண்டோம். இவை போன்று இன்னும் சில வழிகள் வருமாறு:

- மாணவர்களிடம் கதை தொடர்பான படங்களை வெட்டிக் கொடுக்க வேண்டும். அவர்கள் சிறு குழுவினராக இணைந்து அவற்றை ஒருமுகப்படுத்தித் தாமாகக் கதைகளை உருவாக்கிப் பேச வேண்டும்.
- மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரித்துவிட்டு, அலுவலகம், நூலகம், அஞ்சல் நிலையம், மருத்துவமனை, இல்லம் எனப் பல கருப்பொருள்களில் ஒன்றைக் கொடுக்கவேண்டும். அங்கு உள்ளவர்கள் எவ்வாறு தமக்குள் உரையாடல் நிகழ்த்துவார்கள் என்பதை நிகழ்த்துமாறு கூற வேண்டும். மாணவர்கள் தம் வாழ்வில் தாம் பெற்ற அனுபவங்களின் உதவியோடு சிறப்பான உரையாடல்களை வடிவமைப்பர்.
- மாணவர்களிடம் அவர்களுடைய தொலைக்காட்சி பார்த்தல், வானொலி கேட்டல், திரைப்படம் பார்த்தல், கணினியில் விளையாடுதல் ஆகியன தொடர்பாகப் பேசச் சொல்லிக் கருத்துகளையும் அனுபவங்களையும் பரிமாறுமாறு கூறுவதும் நடித்துக்காட்டச் சொல்வதும் மாணவர்களிடையே பேசுதலை அதிகரிக்கும்.
- மாணவர்களை இணையாக அல்லது சிறு குழுக்களாக அமரச் சொல்லிவிட்டுக் கதைப் புத்தகங்களில் ஒன்றை